## 2. மன வரைபடம்

4 - 9 ஆந் தரம் | 20 மணித்துளிகள்

**கருவிகள்:**
A3 அல்லது A4 தாள்

இந்த அணுகுமுறை குறிப்பாக உண்மை எழுத்துருக்களை கட்டமைப்பதற்குப் பொருத்தமானது. தொடர்பான கருத்துகளையுடைய சிறுகிளைகள் பெருங்கிளைகளில் சேர்க்கப்படுகின்றன. முதல்மொழியில் எழுதுவதில் சிக்கல்கள் இருப்பின், பள்ளிமொழியைப் பயன்படுத்தலாம். சில மணித்துளிகளின் பின், உள்ளத்து வரைபடத்தை மீள்பார்வை செய்து, எண்களையும் நிறங்களையும் பயன்படுத்தி துணைத்தலைப்புகள் அல்லது பகுதிகளின் வரிசையினைக் குறித்துக்கொள்க, எ-டு. நீர் முதலில் எதனைக் குறிப்பிடப்போகிறீர்? பின்னர் எவை கையாளப்படும்?




## 3. பிளேஸ்மற் பணித்தாள்

4 - 9 ஆந் தரம் | 25 மணித்துளிகள்

**கருவிகள்:**
A3 அல்லது A4 தாள்

மூன்று அல்லது நான்கு மாணவர்கள் கொண்ட சிறு குழுவினர்க்கு இது நல்ல அணுகுமுறையாகும். எடுத்துக்காட்டாக, ஓர் எடுத்துரைப்புக்கு, அல்லது இன்னொரு குழுநிலை எழுத்துரு எழுதும் ஒப்படைக்கு கருத்துகள் தேடும் வேளையில்.
அறிவுறுத்தல்கள்: 3 – 4 மாணவக் குழுக்கள், மேசைகளில் இருக்க, A3 தாள் ஒன்றினைப் பெறுவர். கீழே காணப்படுவதுபோல் தாள் சிறு பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றன. தலைப்பு, அல்லது பொருள், நடுப்பகுதியில் எழுதப்படுகின்றன

5 மணித்துளிகள் வரை ஒவ்வொரு மாணவரும் தம்முடைய தாளின் பகுதியில் குறிப்புகளைக் குறிப்பர், பொதுத் தலைப்புத் தொடர்பான கருத்துகளையும் இன்றியமையாக் கூறுகளையும் எழுதுவர். பின்னர் அவர்கள் தங்கள் கருத்துகளை தம் குழுவின் ஏனைய உறுப்பினர்களுக்கு எடுத்துரைப்பர், நிறங்களையும்







எண்களையும் பயன்படுத்தி, தம் எழுத்துருவுக்கு அல்லது எடுத்துரைப்புக்கு தாம் பயன்படுத்த விரும்பிய எல்லாவற்றையும் குறிப்பர். அடுத்த நிலையில், இன்னொரு தாள் துண்டில் தம்முடைய எடுத்துரைப்புக்கான அல்லது எழுத்துருவுக்கான பல்வேறு இயல்களின் அல்லது முதன்மைக் கருத்துகளின் ஒழுங்கினை எழுதுவர். இவ்வகையில், எழுத்துருவின் ஏனைய பகுதியின் வளர்ச்சிக்கான திடமான கட்டமைப்பினை குழுக்கள் நிறுவியுள்ளன.